MC.35/2024

09.04.2026

PW1 – சங்கீதா க/பெ. பார்த்திபன், வயது–29

**எதிர்மனுதாரர் ஆஜர் .**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 11.50 A.M.**

**விசாரணை முடிக்கப்பட்டநேரம் –12.05 P.M.**

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 09.04.2026

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

நீங்களும் எதிர்மனுதாரரும் சிறு வயது முதல் நண்பர்களாக இருந்து காதலித்து திருமணம் செய்துகொண்டீர்கள் என்றால் சரிதான். நீங்களும் எதிர்மனுதாரரும் திருமணத்திற்கு பின்னட்டு எத்தனை ஆண்டுகள்ஒன்றாக வாழ்ந்து வந்தீர்கள் என்று சொன்னால் ஐந்து ஆண்டுகள். 2022–ம் ஆண்டு வரை நாங்கள் இருவரும் ஒன்றாக வாழ்ந்து வந்தோம். உங்கள் இருவருக்கும் திருமண பந்தத்தின் வாயிலாக குழந்தைகள் உள்ளதா என்றால் இல்லை. திருமணம் நடந்த மூன்றாம் நாள் உங்களுக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே ஒரு சிறிய சண்டை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த சண்டையின் போது உங்கள் கையிலிருந்த வளையலை உடைத்து அதன் துண்டை எடுத்து கழுத்தை கீறிக்கொண்டு அதற்காக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சண்டையின்போது எதிர்மனுதாரர் உங்களுக்கு கட்டிய தாலியை கழற்றி கீழே போட்டுவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் உங்களிடம் விவாகாரத்து கோரி திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் விவாகாரத்து வழக்கு எண்.198/2024 தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரர் விவாகாரத்து வழக்கு தாக்கல் செய்த பிறகு தான்

நீங்கள் ஜீவனாம்ச வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்திலும் விவாகாரத்து வழக்கு குறித்து சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் எதிர்மனுதாரர் வேறு ஒரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பில் இருப்பதாக எவ்வித ஆதாரமும் இன்றி தவறான சங்கதி சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் உண்மை சங்கதி தான். எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து எந்த தேதியில் உங்கள் பெற்றோர் வீட்டிற்கு சென்றீர்கள் என்று சொன்னால் எனக்கு தேதி ஞாபகமில்லை பிப்ரவரி மாதம் எதிர்மனுதாரர் வீட்டில் தான் என்னை அனுப்பி வைத்தார்கள். 10.02.2021 அன்று எதிர்மனுதாரர் தாயாரிடம் சண்டைபோட்டுவிட்டு நீங்களாவே தான் உங்கள் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரருக்கு எதிராக எப்போது புகார் கொடுத்தீர்கள் என்று சொன்னால் எனக்கு தேதி ஞாபகமில்லை. நீங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எதிர்மனுதாரர் மற்றும் பெற்றோர்களுக்கு எதிராக பொய் புகார் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் புகாரில் உள்ளது உண்மை சங்கதிதான்.

எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.04.09 17:42:02 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.